**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 22 of 2023**

**Prosecution Witness : PW7**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : மணிவாசகன் | **Taluk** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Age** | : |

**(A1, A2 Present)**

**Dated.04.06.2026**

**முதல் விசாரணை**

நான் பூவாளூரில் வசித்து வந்து இலால்குடி தாலுக்கா ஆபீஸ் அருகில் சாரதா என்ற பெயரில் ஜெராக்ஸ் கடை நடத்தி வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்தை எங்கு வைத்து, பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.11/அ.சா.7** ஆகும். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

**கு.வி (அரசு தரப்பில்)**

கடந்த 22.08.2022ம் தேதி மாலை 18 மணியளவில் இலால்குடி தாலுக்கா ஆபீஸ் ரோட்டில் மணி பத்திரம் என்பவரது கடைக்கு அருகில் நானும், ரசீத் என்பவரும் நின்று கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல.

அப்போது புண்ணியர் இருசக்கர வாகனம் காணாமல் போனது சம்மந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. போலீசார் எங்களது முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அந்த பார்வை மகஜரில் நானும், ரசீத்  என்பவரும் சாட்சி கையொப்பம் இட்டோம் என்றால் சரியல்ல. மேற்படி விசயங்களை போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/−சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.04 17:04:47 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி